Ontario

# OPEN ONTARIO

## வேலை வாய்ப்புக்கும் வளர்ச்சிக்குமான ஒன்ராறியோவின் திட்டம்



2010 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

முக்கிய அம்சங்கள்



ஒன்ராறியோவின் 2010 சிம்மாசனப் பிரசங்கமானது OPEN ONTARIO வுக்கு, புதிய வேலை வாய்ப்புகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமென, ஒரு ஐந்து வருடத் திடத்தினை உருவாக்குகின்றது. 2010 பொருளாதாரத் திட்டம் பின்வருவனவூடாக ஒன்ராறியோவுக்கான ஒரு வலுவான பொரளாதார எதிர்காலத்திற்கு ஏற்ற வழிமுறைகளை வகுப்பதற்குப் பிரேரிக்கின்றது:

☑ ஒன்ராறியோ பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளில் மாணவர்களுக்கான புதிய எண்ணிக்கை அதிகரிப்பு

☑ ஒன்ராறியோவின் வட பகுதிகளுக்கான ஆதாரம்

☑ உட்கட்டமைப்பு, தூய மின்சக்தி, முழுநாட் கல்வி மற்றும் குழந்தை பராமிரிப்பில் முதலீடு செய்தல்

☑ அரச மூலவளங்களின் பொறுப்புமிக்க முகாமைத்துவம்.

## கல்விக்கான OPEN ONTARIO திட்டம்

பாடசாலைகளில், கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில், தொழில்களில் முதலிடுவதனூடாக OPEN ONTARIO, புதிய வேலை வாய்ப்புகளுக்கு ஆதரவளிக்கும்.

பல்கலைக் கழகத்திற்கு முன்னரான கல்வி பெறுதலை, 70 சதவீதத்திற்கு உயர்த்துவதே குறிக்கோளாகும்.

☑ கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் செப்டம்பர் தொடக்கம் **20,000 புதிய மாணவர் அதிகரிப்புக்கு** நிதியளித்தல்.

☑ கல்லூரிக்கோ அல்லது பல்கலைக் கழகத்திற்கோ செல்ல விரும்பும் **தகுதிவாய்ந்த ஒவ்வொரு ஒன்ராறியோவாசியும்** ஓர் இடத்தைப் பெறுவர்.

www.ontario.ca/budget

## முழுநாட் கல்வி

வட அமெரிக்காவில் நான்கு மற்றும் ஐந்து வயதினருக்கு முழுநாட் கல்வி வழங்கும் முதலாவது சட்ட அதிகாரமாக ஒன்ராறியோவை OPEN ONTARIO ஆக்கும்.

☑ 600 பாடசாலைகளில் இந்த செப்டெம்பரில் **35,000 வரையிலான சிறுவர்களுக்கு** முழுநாட் கல்வி ஆரம்பமாகிறது,

## சிறுவர் பராமரிப்பில் முதலிடுதல்

ஒன்ராறியோ வருடம் 63.5 மில்லியன் டொலரை முதலிடுவதனூடாக பின்வரும் வழிகளில், மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட இடைவெளியை நிரப்ப முன்வருகிறது:

☑ சுமார் **8,500 ஒன்ராறியோ சிறுர்கள்** சிறுவர் பராமரிப்பில் தொடர்ந்து இருப்பர்.

☑ 1,000 சிறுவர் பராமரிப்புப் பணியாட்கள் தமது வேலையில் தொடர்ந்து இருப்பர்.



# 2010 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

கட்டணமற்ற தொலைபேசி: 1-800-337-7222
கேட்டல் குறைபாடு: 1-800-263-7776

www.ontario.ca/budget

Tamil





# 2010 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

## வேலை வாய்ப்புக்கும் வளர்ச்சிக்குமான ஒன்ராறியோவின் வரித் திட்டம்

வேலை வாய்ப்புகளை உருவாக்கி, புதிய முதலீட்டுக்கு வழிவகுக்கவல்ல, ஒரு கணிசமான கால முக்கியத்துவம் வாய்ந்த வரிச் சீர்திருத்தத்தை ஒன்ராறியோ கொண்டுவந்தது.

ஒன்ராறியோ இவ்வருடம் வரிகளைக் குறைத்து, இணக்கப்பாட்டு விற்பனை வரியுடன் (HST) முன்னகர்கின்றது.

☑ இவையும் ஏனைய வழிமுறைகளும் 10 வருடங்களுக்குள், **சுமார் 600,000 புதிய வேலை வாய்ப்புகளை** உருவாக்கும்; வியாபார முதலீட்டில் 47 பில்லியன் டொலரை கவரும்; வருமானங்களை 8.8 சதவீதம் வரை அதிகரிக்கும்.

☑ தனியாட்களுக்கான 300 டொலர், மற்றும் குடும்பங்களுக்கான 1,000 டொலர் வரையிலான மாறுநிலைக் கொடுப்பனவுகள், ஒன்ராறியோவாசிகள் HSTயைச் சமாளிக்க உதவும்.

☑ வருமானவரி செலுத்துவோரினுள் 93 சதவீதத்தினரது வருமான வரிகள் குறைக்கப்பட்டுள்ளன.

ontario.ca/taxchange

## குறுங்கால உட்கட்டமைப்பு முதலீடுகள்

றோட்டுகள், பாலங்கள், போக்குவரத்துகள், பாடசாலைகள் மற்றும் ஏனைய உட்கட்டுமானங்களில் இரண்டு வருடங்களுக்கு முன்னெப்போதும் இல்லாதளவு முதலீடுகள், 300,000க்கும் மேலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிப் பாதுகாக்கும்.

ontario.ca/infrastructure



## பசுமைப் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புகள்

மூன்று வருடங்களில் **50,000 புதிய வேலை வாய்ப்புகளை** உருவாக்க The Green Energy Act, 2009 உதவும்.

திறந்த ஒன்ராறியோ பிரேரித்துள்ள புதிய நீர் உபாயமானது ஒன்ராறியோவின் நீர் வளங்களைப் பாதுகாத்து, புதிய வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்கும்.



## OPEN ONTARIO வடபகுதி உபாயம்

வருடம் சுமார் 150 மில்லியன் டொரை மூன்று வருடங்களுக்கு நாம் முதலிடுகிறோம்:

☑ பாரிய கைத்தொழிற் பாவனையாளர்களுக்கான மின்சார விலையை அநேகமாக 25 **சதவீதம் குறைக்கின்றோம்**

☑ வேலை வாய்ப்புகளை உருவாக்கிப் பாதுகாக்க உதவுகிறோம்.







# திறந்த ஒன்ராறியோ — வேலை வாய்ப்புக்கும் வளர்ச்சிக்குமான ஒன்ராறியோவின் திட்டம்

Ring of Fire* பிராந்தியத்தில் உள்ள வேலை வாய்ப்புகளிலிருந்து பூர்வீகவாசிகளும் வடபகுதி ஒன்ராறியோ வாசிகளும் பயன்பெற உதவும் வகையில், புதிய வினைத் திறன் பயிற்சித் திட்டங்களுக்கென மூன்று வருடங்களில் நாம் 45 மில்லியன் டொலரை முதலிடுகின்றோம்.

☑ ஒரு Ring of Fire* ஒருங்கிணைப்பாளர் அப்பகுதியின் பொருளாதார வாக்குறுதிகளை உயர்த்துவதற்கான எமது கூட்டு முயற்சிகளை முன்னெடுப்பார்.

உயர் மின்சாரச் செலவுக்கு உதவுவதற்கென தனிநபருக்கு வருடாந்தம் 130 டொலர் மற்றும் குடும்பங்களுக்கு 200 டொலர் வரையிலான Northern Ontario Energy Credit ஒன்றை நாம் அறிமுகம் செய்கிறோம்.
**இது மாகாண ரீதியாக தற்போதுள்ள விற்பனை, சொத்து வரிக்கொடுப்பனவுக்கும் மேலதிகமான கொடுப்பனவாகும்.**



## பொறுப்பு முகாமைத்துவம்

### *அரசிறைத் திட்டம்*

அரசாங்கமானது பற்றாக் குறையை ஐந்து வருடங்களில் பாதியாகக் குறைத்து, எட்டு வருடங்களில் அதனை முற்றாக அகற்றிவிடும்

உள்ளகத் தொழிற்பாட்டுச் செலவினங்கள் 2010-11 மட்டங்களில் அல்லது அதன் கீழாக நிலைநிறுத்தப்படும்.

### *இழப்பீடு*

பின்வருவனவூடாக செலவு அழுத்தங்களைச் சமாளித்தலும், பாடசாலை மற்றும் பொதுச் சேவைகளை பேணுவதற்கென்று 2011-12 அளவில் 750 மில்லியன் டொலரை மீள்நெறிப்படுத்தலும் மேற்கொள்ளப்படும்:

☑ சட்டசபை உறுப்பினர்கள் தற்போதுள்ள சம்பள உறைவை, மொத்தம் மூன்று வருடங்களாகும் வகையில், மேலும் இரு வருடங்கள் நீடிப்பர்.

☑ விரிவான பொதுச் சேவையிலும், ஒன்ராறியோ பகிரங்க சேவையிலும் உள்ள தொழிற்சங்கம் அற்ற சகல வேலைபெறுநர்களது சம்பளமும், நலன் கொடுப்பனவுகளும் இரு வருடங்களுக்கு உறைநிலையில் விடப்படும்.

☑ நடைமுறையிலுள்ள கூட்டு உடன்படிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்

☑ கூட்டு உடன்படிக்கைகள் மீள்பேச்சுவார்த்தைக்கு வரும்போது அரசாங்கம், மாற்றீட்டுப் பங்காளிகளுடனும் பேரம்பேசும் முகவர்களுடனும் சேர்ந்து, இக்கூட்டு உடன்படிக்கைகளை ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களுக்காவது நிர்ணயிக்கும்.

☑ எந்த எதிர்காலக் கூட்டு உடன்படிக்கைகளுக்கெனவும் இந்த அரசிறைத் திட்டமானது இழப்பீட்டு உயர்வு அதிகரிப்புகளையும் வழங்காது.

* Ring of Fire – வடபகுதியில் பெருமளவிலான குறோமைற், நிக்கல், செம்பு, பிளற்றினம் போன்ற கனிமங்களின் வீழ்படிவுகளைக் கொண்ட ஒரு பகுதியாகும்